அசல்

4.4.38 ப. ராமஸ்வாமி

அசல் -1

4th april '38

பிரமஸ்ரீ

மகாமகோபாத்தியாய வெ. சாமிநாதய்யர்அவர்கள்

தியாகராஜ விலாஸம்,

திருவேட்டீஸ்வரன்பேட்டை.

திருவல்லிக்கேணி, சென்னை.

அன்புமிக்க ஐயா,

நமஸ்காரம். சுமார் 6 மாதங்களுக்கு முன் வெள்ளகால் ஸ்ரீ முதலியாரவர்களின் எண்பதாம்ஆண்டு நிறைவுவிழாவிற்குத் தாங்கள் வந்திருந்த பொழுது, கனம் டி.கே. சிதம்பரநாதமுதலியார் அவர்கள் என்னைத் தங்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்கள். அப்பொழுது ஸ்ரீ முதலியாரவர்களின் கம்பராமாயண சாரத்தைப் பதிப்பித்து வரலால் பிரஸ்ஸில் மானேஜராகக் இருந்தேன். இப்பொழுது "மணிக்கொடி" பத்திரிகையின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு நடத்திவருகிறேன். "மணிக்கொடி" சிறுகதைப் பத்திரிகை. அதில் தமிழ் இலக்கியம் நன்கு பரிமளிக்கும்படி செய்ய வேண்டுமென்பதுஎன் அவா. இது சம்பந்தமாய் ஸ்ரீ. டி. கே. சி. அவர்களுக்கும், பி. ஸ்ரீ. ஆசாரியா அவர்களுக்கும் எழுதியிருந்தேன். இரு அறிஞர்களும் "மணிக்கொடி"க்கு எழுத இசைந்திருக்கிறார்கள். கம்பராமாயணத்தில் குறிப்பிட்ட சில காட்சிகளை அப்படியே எடுத்துக் கொடுத்து அவற்றிற்கு முகவுரையும் விளக்கமும் எழுதுவதாக ஸ்ரீ. டி.கே.சி. அவர்கள் இசைந்திருக்கிறார்கள்.

தாங்களும் "மணிக்கொடி"க்கு விஷயதானஞ் செய்து உதவ வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். சிரமம் கொடுப்பதற்கு மன்னிக்கவும். ஒருவாரத்தில் நேரில் வந்து சம்பாஷிக்க எண்ணியிருக்கிறேன். இத்துடன் தங்கள் மேலான பார்வைக்கு நான்கு "மணிக்கொடி" இதழ்கள் வருகின்றன.

தங்கள் பணிவுள்ள,

ப. ராமஸ்வாமி

அசல்

4.4.38 ப. ராமன்வாமி

அசல் -1

4.4.38

15

15/1